3. கவன ஈர்ப்பு.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த துணிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாத காரணத்தால் கூட்டுறவு கைத்தறி சங்கங்களில் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு. திரு. சின்னசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் குறித்த ஒரு நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

*திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த துணிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யாத காரணத்தால் கூட்டுறவு கைத்தறி சங்கங்களில் பணிகள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து'' மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று இது குறித்து பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை.

கோ-ஆப்டெக்ஸ் என அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் தமிழ்நாட்டில் உள்ள 1,514 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தாய்ச் சங்கமாக விளங்குவதுடன் அவைகள் உற்பத்தி செய்யும் துணிகளை கொள்முதல் செய்து, தன் கிளை விற்பனை நிலையங்கள் வாயிலாக விற்பனை செய்து வருகிறது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தேசிய விவசாய மற்றும் கிராம வளர்ச்சி வங்கி காசுக்கடனாக ரூ. 90 கோடி அனுமதி அளித்துள்ளது. இவ்வசதியினை பயன்படுத்தி கொள்முதல் செய்யும் இனங்களுக்கு அவ்வப்போது நிதி நிலைமைக்கேற்ப கோ-ஆப்டெக்ஸ் பட்டுவாடா அளித்து வருகிறது. சமீபத்தில் தமிழக அரசு விடுவித்த ரூ. 5 கோடி ரிபேட் மானியத்

துடன் காசுக்கடன் வசதியை பயன்படுத்தி ஆகஸ்ட் மாத இறுதியில் ரூ. 23.20 கோடி அளவிற்கு பட்டுவாடா அளித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு :

வரிசை எண்.	மாவட்டம்.	பட்டுவாடா செய்யப் பட்ட தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய் இலட்சத்தில்).
1	செங்கை எம். ஜி. ஆர்.	423.13
2	கோயமுத்தூர்	233.29
3	தர்மபுரி	26.33
4	கன்னியாகுமரி	52.65
5	மதுரை	51.84
6	திண்டுக்கல் அண்ணா	15,22
7	சென்னை	4.98
8	வட ஆற்காடு அம்பேத்கார் மற்றும் திருவண்ணாமலை சம்புவராயர்	163.09
9	பெரியார்	435.64
10	இராமநாதபுரம்	13.47
11	காமராஜர்	217.20
12	பசும்பொன் முத்துராமலிங்கம்	9.39
13	சேலம்	361.17
14	தென்ஆற்காடு	17.69
15	தஞ்சை	114.66
16	திருநெல்வேலி	58.89
17	திருச்சி	121.55
		2,320.19

1991 செப்டம்பர் 17]   [திரு. இ. மதுசூதனன்]

நாளது தேதியில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது துணிகளை கொள்முதல் செய்த வகையில் ரூ. 13.38 கோடி மட்டுமே பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு பட்டுவாடா அளிக்க வேண்டியுள்ளது. தற்போது மத்திய அரசு ரூ. 2.82 கோடி அளவிற்கு ஜனதா மான்யத் தொகை வழங்கியுள்ளது. தவிரவும் மத்திய அரசு ரூ. 3.18 கோடி ஜனதா மான்யமாக வழங்கப்பட வேண்டியுள்ளது. மேலும் ரிபேட் மான்யத் தொகையாக 1990-91 ஆம் ஆண்டிற்கு ரூ. 6.93 கோடி கோ-ஆப்டெக்ஸ்க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. இத்தொகையின் மொத்தமே ரூ. 12.93 கோடி ஆகும். மேற்கூறிய இனங்களின் வாயிலாகவும் வருகின்ற தீபாவளி பண்டிகையின் விற்பனை வாயிலாகவும் பெறக்கூடிய தொகையினை கொண்டும் தற்போது நிலுவையிலுள்ள தொகைகள் யாவும் அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் உரிய நேரத்தில் பட்டுவாடா அளிக்கப்படும்.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படும் துணிகளுக்கு அவ்வப்போது பணம் பட்டுவாடா அளித்து வருகிறது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி பாதிக்காத வண்ணம் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது அவ்வப்போது கொள்முதல் நிலுவையின் ஒரு பகுதியினை பட்டுவாடா செய்து வருகிறது. எனவே நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் அன்றாட பணிகளுக்கு குந்தகமின்றி கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் காலந்தோறும் பணம் பட்டுவாடா அளித்து வருகிறது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்களுக்கு எல்லாம் தாய்ச் சங்கமாக இருக்கிற கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தேசிய விவசாய மற்றும் கிராம வளர்ச்சி வங்கியிலிருந்து ரூ. 90 கோடி நிதியுதவி பெற்றுதான் சங்கம் நடந்து வருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுவாக ஆண்டுதோறும் இதே பிரச்சினை இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் தீபாவளி பொங்கல் வரும் போதெல்லாம் சங்கங்களில் இருப்பவர்களுக்கு எல்லாம் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை, துணிகள் தேங்கியிருக்கின்றன என்று ஆண்டுதோறும் சொல்கிறார்கள். ஆகவே இந்த நிதியை உயர்த்தித் தருவதற்கு மேற்படி வங்கியிடம் கேட்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து தெளிவான அறிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே 23.20 கோடிகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. தரவேண்டியது 13.38 கோடிகள்தான், வரவேண்டியது 12.93 கோடிகளாகும், ஆதலால் அவசியம் இல்லை

என்ற காரணத்தால் கேட்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு கொள்முதல் செய்வதற்காகவும், பணம் பட்டுவாடா செய்வதற்காகவும், மத்திய அரசு ஜனதா மானியத் தொகையாக 2 கோடியே 82 லட்சமும் வழங்கியிருக்கிறது என்றும் மேலும் ரூ. 3 கோடியே 18 லட்சமும் அதோடு ரிபேட் தொகையாக 6 கோடியே 93 லட்சமும் ஆக மொத்தம் 12 கோடியே 93 லட்சமும், ஆக இந்தப் பணத்தை வைத்துக் கொண்டுதான் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அங்கே நடைபெறும் என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அப்படியானால், மாநில அரசு எவ்வளவு தொகை வழங்குகிறது, அதிலே மாநில அரசினுடைய பங்கு என்ன என்பதையும், எவ்வளவு பணத்தை மத்திய அரசு ஒதுக்குகிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தளநாயகி, புரட்சித் தலைவி அவர்களை நம்பியவர்கள் எவரும் கெட்டதில்லை, நம்பாமல்தான் பலர் கெட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அருமை நண்பருக்கு நான் நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவி ஆட்சிப் பீடத்திற்கு வந்த சில நாட்களுக்குள்ளாகவே, 5 கோடி ரூபாயை ஒதுக்கித்தந்து இருக்கிறார்கள். இன்னும் ஒதுக்கித் தரவேண்டிய தொகை ரூபாய் 6.93 கோடிகளாகும். மத்திய அரசின் வாயிலாக 2.2 கோடி ரூபாய் ஒதுக்கீடு வந்தது. இன்னும் ஒதுக்க வேண்டிய தொகை 3.18 கோடிகளாகும். ஆதலால், 3.18 கோடிகளைக் குறித்து, நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள், கடிதங்களை மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதோடு இல்லாமல், தீபாவளியை முன்னிட்டு, விற்பனை மூலமாக வருகிற லாபத்தை ஈட்டி, ஒட்டுமொத்தமாக தொழிலாளர் நண்பர்களுக்குத் தருவோம் என்பதையும் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன். எந்த விதத்திலும் ஏழைகள் இந்த அரசில் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதை அருமை நண்பர் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.